தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 6

ந.க.எண்: 047393 /எம்1/இ1/2025 நாள்: .07.2026

| | | |
|---|---|---|
| பொருள் | : | பள்ளிக் கல்வி – போதைப்பொருள் விழிப்புணர்வு உறுதிமொழி – அனைத்து வகைப் பள்ளிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி – 11.08.2026 – பிற செயல்பாடுகள் – 03.08.2026 முதல் 07.08.2026 வரை நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்ந்து. |
| பார்வை | : | 23.07.2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வழங்கப்பட்ட கூட்ட அறிவுரைகள் |

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 11 ஆம் நாளன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

பார்வையில் காணும் கூட்ட அறிவுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, நடப்பாண்டிலும் அனைத்து வகை பள்ளிகளிலும் (தனியார் பள்ளிகள் உட்பட)11.08.2026 அன்று காலை போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட வேண்டும். மேலும், இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கும் வகையில், மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அனைத்து வகைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடையே போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, இணைப்பில் கண்டுள்ளவாறு **11.08.2026** அன்று காலை உறுதிமொழி எடுக்க அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும் அறிவுறுத்திடவும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அந்நிகழ்விற்கு பின் உறுதிமொழி எடுத்த விவரத்தினை இணைப்பில் கண்டுள்ள google sheet –இல் பள்ளி வகை வாரியாக 12.08.2026 பிற்பகல் 12.30 மணிக்குள் நிரப்ப வேண்டும்.

பின்வரும் அட்டவணையை மாதிரியாக கொண்டு, **03.08.2026 முதல் 07.08.2026** வரை அனைத்து வகைப் பள்ளிகளிலும் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள் பள்ளி அளவில் கட்டாயம் நடத்தப்பட வேண்டும்.

| நாள் | நிகழ்வு |
|---|---|
| 03.08.2026 | போதைப்பொருள் எதிர்ப்பு சுவரொட்டி (Poster Making) மற்றும் முழக்கவாசகம் (Slogan Writing) போட்டிகள். |
| 04.08.2026 | ஓவியப் போட்டி. |
| 05.08.2026 | மகிழ் முற்றம் வாயிலாக போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். |

| | |
|---|---|
| 06.08.2026 | போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி. |
| 07.08.2026 | பள்ளி மேலாண்மைக் குழு (SMC) மற்றும் பெற்றோர்–ஆசிரியர் கழகம் (PTA) வாயிலாக சமூக விழிப்புணர்வு (Community Outreach) நிகழ்வுகள். |

மேலும், மேற்கண்ட அனைத்து செயல்பாடுகளிலும் மாவட்ட போதைப்பொருள் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர்கள் இணைந்து செயல்படும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்டத் திட்ட அலுவலர்கள் (நாட்டு நலப்பணித் திட்டம்), அனைத்து இளஞ்செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்கள், தேசிய மாணவர் படை (NCC), வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கும் உரிய சிறப்புப் பணிகளை ஒதுக்கீடு செய்து அனைத்து பள்ளிகளிலும் மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் முழுமையாக நடைபெறுவதை உறுதி செய்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

பள்ளிக் கல்வி இயக்குநர்

28/07/26

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டம்.

# PLEDGE AGAINST DRUG ABUSE

I am aware of the ill effects of drug abuse and I solemnly promise not to indulge in drug abuse. I also swear my sincere contribution to prevent and advise my family members and friends not to fall into the habit of drug abuse. I assure to fully contribute for the cause of rescuing and guiding the drug abusers to give up drugs.

I will fully stand with the Government in their fight against the usage, consumption, and manufacturing of illegal narcotic substances in order to eradicate them from Tamil Nadu. I affirm to contribute with utmost dedication towards the growth of the State and welfare of its people.

Thank You.

## போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

நன்றி! வணக்கம்!